1983 பிப்ரவரி 5]

உப்புத்தண்ணீர்ப் பாசனத்தில் விளையும் நெல் ரகங்கள்

*வினா எண் 148—திரு. எம். சின்னசாமி:— மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உப்புத்தண்ணீர் பாசனத்தில் விளையும் நெல் பயிர் ரகத்தினை டில்லி மத்திய அரசு ஆராய்ச்சி நிலையம் கண்டுபிடித்திருப்பது அரசு அறியுமா?

மாண்புமிகு டாக்டர் கா காளிமுத்து: தாமோதர், தாசல், ஜெட்டு ஆகிய மூன்று நெல் ரகங்கள், உப்புத் தண்ணீர் பாசனத்தில் விளையும் ரகங்களாக மத்திய அரசு ஆராய்ச்சி நிலையம் கண்டு பிடித்துள்ளது.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ரக நெல்லை நம் மாநிலத்திலே பயிர் செய்வதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நேரடியாக அந்த ரக நெல்லை நாம் பயிர் செய்ய இயலாது. இவை குறைந்த மகசூலைக் கொடுக்கக் கூடியவை; சாயுந்தன்மை கொண்டவை; குறைந்த தூர்களே கொடுக்கும் தன்மை வாய்ந்தவை. ஆகவே, ஐ. ஆர். 20 இரகத்துடன் கருச்சேர்க்கையில் இணைத்து, டி. என். எ. யூ. 17005 என்ற புதிய ஒட்டு இரக நெல்லை நாம் பயன்படுத்துகிறோம்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே பெரும்பகுதி புன்செய் விவசாயம். வறட்சி நிறைந்த பகுதியாக, தண்ணீர் இல்லாத காரணத்தினால், இப்படிப்பட்ட பகுதிகளிலே பயிரிட புதிய விதையைக் கண்டுபிடித்து, குறைந்த தண்ணீரில் அதிக விளைச்சலைப் பெறுவதற்கான ஆராய்ச்சி நடைபெறுகிறதா? அப்படிப்பட்ட விதைகள் ஏதாகிலும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அந்த வகையில் ஆராய்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்போது ஐ. ஆர். 50 என்ற நெல்லை நாம் பரிந்துரை செய்கிறோம்.

கோவைப் பல்கலைக்கழகம் மேற்கொண்டுள்ள ஆராய்ச்சி.

*வினா எண் 149—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவைப் பல்கலைக்கழகம், பசுமை புரட்சியில் கிராமப்புற வளர்ச்சி பற்றி ஆராய்ச்சியை துவக்கியுள்ளதா?

(ஆ) ஆமெனில் அதன் விவரமென்ன?

(இ) அதற்கு அரசு அளிக்கும் மான்யம் எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் பசுமைப் புரட்சியின் விளைவுகள் பற்றிய ஆய்வு ஒன்றை வடாற்காடு மாவட்டத்தில் கீழ்க்காணும் கேள்விகளுக்கு விடைகாணும் பொருட்டு துவங்கியுள்ளது:—

(1) பசுமைப் புரட்சி, பல்வேறுஉற்பத்தித் துறைகளின் வளர்ச்சிக்கு எவ்வாறு உதவியுள்ளது?

(2) உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்புவளர்ச்சிக்கு அது எந்த அளவிற்கு வழி செய்கிறது?

(3) பஞ்சாப் மாநிலத்தோடு ஒப்பிட்டால் தமிழக பசுமைப் புரட்சியின் பயன் கூடுதலா? குறைவா? அதற்கான காரணங்கள் யாவை?

(4) பசுமைப் புரட்சியின் முழுப் பலனையும் அடைய என்ன புதிய முயற்சிகள், கொள்கைகள் தேவை?

(இ) அரசு அளிக்கும் மானியம் எதுவும் இல்லை.

திரு பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே வட ஆற்காடு மாவட்டத்திலே அந்த ஆராய்ச்சி நடத்தப்படுவதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்த மாவட்டத்திலே எந்தெந்தப் பகுதியிலே அந்த ஆராய்ச்சி நடத்தப்படுகிறது? அதனுடைய முடிவு எப்பொழுது அரசுக்குக் கிடைக்கும் என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் என்கின்ற வகையில்தான் குறிப்பு இருக்கிறது இது 1-11-1981 ல் தொடங்கியுள்ளது. 30 மாதங்கள் நடக்கும். 30-4-1984ல் இது முடியும்.

திரு.பெ. சு, திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சியை நடத்துகின்ற அதிகாரிகள் ஆங்காங்கு இருக்கின்ற விவசாயிகளையும் சந்தித்து, இந்த ஆராய்ச்சிக்காக, அவர்களுடைய அனுபவத்தையும் கேட்டு அறிவார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அதிலே 800 குடும்பங்கள், 600 பண்ணைகள், 100 தொழிற்சாலைகளிலிருந்து 16 ஆய்வாளர்கள் மூலம் விவரம் சேகரிக்கப்படும் என்று இருக்கிறது. ஆகவே, விவசாயிகளிடத்திலேயிருந்தும் இந்த விவரம் பெறப்படும்.